# பம்மல் நகராட்சி

## கூட்ட நடவடிக்கைகளின் எடுகுறிப்பு

2018 ஆண்டு மார்ச் 21ம் நாள் புதன் கிழமை மாலை 3.00 மணிக்கு, பம்மல் நகராட்சியின் மன்றக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் திருமதி. இரா. சந்திரா M.Com., MCA., MBA., அவர்கள் தலைமையில் மன்றக்கூடத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைளின் எடுகுறிப்பு.

**<u>பொருள் எண் : 1</u>**

அறிவிப்பு பகுதி IV பிரிவு 2 எண்.33, நாள் 25/01/2018ல் சட்ட எண். 6/2018 தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் ( இரண்டாவது திருத்தம் ) திருத்தப்பட்டுள்ளவாறு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 –பிரிவு 83 உட்பிரிவு 1 பகுதி (சி) ன்படி நகராட்சிகளிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் அவை சம்பந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர ஏனைய அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்து வரி விதிக்கப்பட வேண்டும் என சட்டமாக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் பம்மல் நகராட்சி பகுதியில் நடைபெற்றுவரும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் அவை சம்பந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர அனைத்து கல்வி நிறுவனங்களும், பொறியாளர், நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர் அடங்கியக் குழு ஆய்வு செய்து உரிய அளவீடுகள் அளிக்கவும், அதனை மேலாளர் உறுதி செய்யவும், பின்னர் வருவாய் ஆய்வாளர் அந்தக் கட்டடத்திற்கான வரித்தொகையை நிர்ணயிக்கவும், அறிவிப்பு பகுதி IV பிரிவு 2 அறிவிப்பு எண்.33, நாள் 25/01/2018ல் சட்ட எண். 6/2018 தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் (இரண்டாவது திருத்தம்) திருத்தப்பட்டுள்ளவாறு அறிவிப்பினை நடைமுறைக்கு கொண்டு வர அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

அறிவிப்பு பகுதி IV பிரிவு 2 எண்.33, நாள் 25/01/2018ல் சட்ட எண். 6/2018 தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் ( இரண்டாவது திருத்தம் ) திருத்தப்பட்டுள்ளவாறு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920–பிரிவு 83 உட்பிரிவு 1 பகுதி (சி) ன்படி பம்மல் நகராட்சியிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் அவை சம்பந்தப்பட்ட விடுதிகள், நூலகங்கள் தவிர ஏனைய அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் சொத்து வரி விதிக்கப்பட வேண்டும் என சட்டமாக்கப்படுள்ளதை பம்மல் நகராட்சியில் நடைமுறைப்படுத்தி வசூலிக்க அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்: 242** **நாள்: 21.03.2018**

இது தொடர்பாக அரசிதழில் வெளியிடவும் அதற்குரிய செலவினத்தை மேற்கொள்ளவும் அனுமதியுடன் வசூலிப்பதற்கும் அனுமதி வழங்கப்படுகிறது.

ஓம் .......................

திருமதி. இரா. சந்திரா M.Com.,
MCA., MBA.தனி அலுவலர்,
பம்மல் நகராட்சி

/உண்மை நகல்/

**ஆணையர்**

பம்மல் நகராட்சி